**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 292/2012**

**Witness DW 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலியம்மாள் | தொழில் | |
| க/பெ | | வயது | |
| ஊர் | | தேதி | 10.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (10.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**சத்தியமாக சொல்கிறேன்**

எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் மண் எங்களுக்கு உரிமையானது என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். லட்சுமணன் என்பவர் எனது அப்பா என்றால் சரி. வீரப்பன், ஆறுமுகம், சக்திவேல் ஆகியோர் எனது அண்ணன்கள் என்றால் சரி அவர்கள் இறந்துவிட்டனர். பெரியநாயகம் எனது தங்கையார் என்றால் இல்லை. ஆறுமுகம் எனது தம்பி என்பவர் 5 வயதில் இறந்துவிட்டார் என்றால் சரி.ஆறுமுகம் மற்றும் அஞ்சலை என்பவருக்கு பிறந்தவர் தான் 4வது வாதியான பார்வதி என்றால் சரி. ஆறுமுகம் என்பவர் இறந்த பிறகு அஞ்சலை என்பவர் வேறு திருமணம் செய்துகொண்டார் என்றால் இல்லை. இருசன் மற்றும் அஞ்சலை என்பவருக்கு பிறந்தவர் தான் 1வது வாதி முருகன் என்றால் இல்லை. இருசன் மற்றும் அஞ்சலை ஆகியோர் தாவா சொத்தில் தான் வாழ்ந்து வந்தனர் என்றால் இல்லை. நான் எனது சொந்த ஊரான நரையன்குடியில் வசித்து வருகிறேன். லட்சுமணன் என்பவர் உயிருடன் இருந்த சமயத்தில் பாக பிரிவினை ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி அதற்காக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளனர் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு எனது அப்பாவான லட்சுமணன் என்பவர் பெயரில் தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரி. எனது அப்பா லட்சுமணன் என்பவர் சாமிகண்ணு என்பவரிடம் தாவா சொத்தை ஈடுகாட்டிய அடமானம் போட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஈடுகாட்டிய அடமான கடனை நான் தான் பணம் கட்டி மீட்டேன். அனைவரும் பங்கு கொடுத்து தான் அடமான கடனை மீட்டோம் என்று

சொன்னால் இல்லை. எனக்கு வாரிசு உள்ளதா என்றால் மகன் இருக்கிறார். எனது மகனுக்கு லட்சுமணன் தாதா என்ற முறையில் அவருக்கு பாகம் உள்ளது என்றால் அதனை அவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். வீரப்பன், ஆறுமுகம், சக்திவேல்ஆகியோருக்கு இருசன் என்பவர் தான் குடும்ப தலைவராக இருந்தார் என்றால் சரி.அதனால் தான் லட்சுமணன் என்பவரது பெயரில் இருந்த பட்டா இருசன் என்பவரது பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரி. குமரவேல் என்பவருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த விவரம் எனக்குதெரியும். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் லட்சுமணன் என்பவரது மகன்களுக்கும் அவ்வாறு அவரது மகன் இறந்த பிறகு அவரது வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால் இல்லை. 1வது மற்றும் 2வது பிரதிவாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakhmi)
I Additional Subordinate Judge,
Villupuram